# பகுதி – ஏழு

# அறைக் கண்காணிப்பாளர்களுக்கான அறிவுரைகள்

## VII. அறைக் கண்காணிப்பாளர்களுக்கான அறிவுரைகள்

1. ஆய்வு அலுவலரிடமிருந்து உரிய எழுத்துப்பூர்வமான ஆணை பெற்றவுடன் அந்தந்தத் தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர் தேர்வுக்கு முன்பாக நடத்தும் தேர்வுப் பணி குறித்தக் கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும்.

2. அறைக் கண்காணிப்பாளர்கள் தேர்வு குறித்த அனைத்து அறிவுரைகளையும் சரியாகப் பெற்றுக் கொண்டு, தங்களது தொலைபேசி / அலைபேசி எண்ணைக் கண்டிப்பாக முதன்மைக் கண்காணிப்பாளரிடம் அளிக்க வேண்டும்.

3. ஒவ்வொரு தேர்வுகளுக்கும் அறைக் கண்காணிப்பாளர்கள் +1 / +2 / SSLC தேர்வு நாள் அன்று **8.45** மணிக்குள் தேர்வு மையத்திற்கு வரவேண்டும். உடன் தங்களது அலைபேசியினை அணைத்து விட்டு (Switch Off) முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

4. அலைபேசிகளைத் தேர்வுக் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைக்காமல், தம்முடன் தேர்வறையில் அறைக் கண்காணிப்பாளர்கள் தங்கள் வசம் வைத்திருப்பதாகப் பின்னர் கண்டறியப்பட்டால், அன்னார் மீது கடுமையான துறை நடவடிக்கை எடுக்கப்படும்.

5. முதன்மைக் கண்காணிப்பாளரிடமிருந்து பெறப்பட்ட அடையாள அட்டையைக் கண்டிப்பாக அணிய வேண்டும்.

6. அறைக் கண்காணிப்பாளர்கள் தேர்வுப் பணிக்கு வந்தவுடன் தேர்வு கட்டுப்பாட்டு அறையில் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு, குலுக்கல் முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட அறை எண்ணிற்குரிய விடைத்தாள் மற்றும் அறைக்குரிய வருகைப் பட்டியல் அடங்கிய துணி / ரெக்சின் பையினை எடுத்துக் கொள்ள வேண்டும்.

7. அறைக் கண்காணிப்பாளர் தான் எடுத்த உறையில் உள்ள விடைத்தாட்களை வெளியே எடுத்து உறையின் மீதுள்ள தேர்வு எண்ணும், விடைத்தாளின் முகப்புச் சீட்டில் உள்ள தேர்வு எண்ணும், தேர்வர் வருகைச் சீட்டில் உள்ள தேர்வு எண்ணும் சரியாக உள்ளதா என்பதையும் சரிபார்க்க வேண்டும். மேலும் முதன்மைக் கண்காணிப்பாளரின் ஒப்ப உருவ நேர்படி (FACSIMILE) உள்ளதா என்பதை சரிபார்க்க வேண்டும். அன்றையத் தேர்வுப் பாடத்திற்குரிய தேவையான எண்ணிக்கையில் கூடுதல் விடைத்தாட்களை முதன்மைக் கண்காணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. விடைத்தாளின் அனைத்துப் பக்கங்களும் சரியாக உள்ளனவா என்பதைப் படிவம் –7–ன் படி சரிபார்த்த பின்னர் முகப்புத் தாளின் A பகுதியின் வலது புறத்தில் Verified எனக் குறிப்பிட்டுக் சுருக்கொப்பம் இட வேண்டும். தேர்வு துவங்குவதற்கு முன் எக்காரணம் கொண்டும் அனைத்து முதன்மை விடைத்தாட்களிலும் துளையிடும் கருவி கொண்டு துளையிடக் கூடாது. கூடுதல் விடைத்தாட்கள் பயன்படுத்தும் போது மட்டும் தேர்வர்களின் முதன்மை விடைத்தாளையும், கூடுதல் விடைத்தாட்களையும் துளையிடும் கருவி கொண்டு துளையிட்டு சேர்த்துக் கட்ட வேண்டும்.

9. முதன்மைக் கண்காணிப்பாளர் +1 / +2 / SSLC - **9.30** மணிக்கு வழங்கக் கூடிய வினாத்தாள் கட்டுகளைப் பெற்று, தேர்வு நாள், தங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தேர்வறைக்குரிய பாடம் ஆகியவை சரியாக உள்ளதா என சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

10. தேர்வு அறைக்குச் செல்லும் முன்பாக, முதன்மை விடைத்தாள், கூடுதல் விடைத்தாள், தேர்வர் வருகைச் சீட்டு, வினாத்தாள், வினாத்தாள் கட்டினைப் பிரிப்பதற்கான மடக்குக் கத்தி ஆகியவை சரியாக உள்ளதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

11. அறைக் கண்காணிப்பாளர்களால் தேர்வர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சிறப்பு அறிவிப்புகள் **(Special Announcements)** :

1. தேர்வு துவங்குவதற்கு முன்பு அன்றைய தேர்வுக்குரிய முதன்மை விடைத்தாளின் பக்க எண்ணிக்கையை (படிவம் 7–ன்படி) தேர்வர்களுக்கு அறிவித்து, தேர்வர்கள் தமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் பக்கங்களின் எண்ணிக்கையைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும் என அறிவுறுத்துதல் வேண்டும்.

2. தேர்வர்கள் தமது முகப்புச் சீட்டிலுள்ள புகைப்படம், பெயர், பாடம், பயிற்று மொழி, தேதி ஆகிய விவரங்களைச் சரிபார்த்துக் கொள்ள வேண்டும்.

3. தேர்வர்கள் தங்களது மேசை மற்றும் நாற்காலிக்கு அடியில் எவ்விதமான துண்டுச் சீட்டுகளும் இல்லை என்பதை தேர்வு தொடங்கும் முன்பே உறுதி செய்து கொள்ள வேண்டும்.

4. தேர்வர்கள் விடைத்தாளின் எந்தவொரு பகுதியிலும் தமது தேர்வெண்ணையோ அல்லது பெயரையோ கண்டிப்பாக எழுதுதல் கூடாது.

5. தேர்வர்கள் தேர்வெழுதும் போது சுருக்க வேலை (Rough Work) செய்வதற்கு விடைத்தாளின் அடிப்பகுதியை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

6. கூடுதல் விடைத்தாட்கள் வேண்டுமெனில் கடைசி 2 பக்கங்கள் எழுதும் முன்னரே கூடுதல் விடைத்தாளின் தேவையை அறைக் கண்காணிப்பாளரிடம் தெரிவிக்க வேண்டும் . இதன் காரணமாக கால விரயம் தவிர்க்கப்படும்.

7. தேர்வர்கள் ஒரு சில விடைகளைக் கோடிட்டு அடிக்கும் நிகழ்வுகளில் , “மேற்படி விடை என்னால் அடிக்கப்பட்டது” என்ற குறிப்புரையைப் பேனாவினால் எழுதுமாறு அறிவுறுத்துதல் வேண்டும். ஆனால் தேர்வரது /அறைக் கண்காணிப்பாளரது கையொப்பம் இடப்படக்கூடாது. மேலும் தேர்வரது பதிவெண்ணோ, பெயரோ எழுதப்படக்கூடாது என்ற அறிவிப்பினையும் வழங்க வேண்டும்.

8. விடைத்தாளில் தாம் எழுதிய அனைத்து விடைகளையும் முழுவதுமாக தேர்வர் தாமே அடித்துவிடும் நிகழ்வானது ஒழுங்கீனச் செயல் எனக் கருதப்படும். அன்னாரது தேர்வு முடிவு நிறுத்தம் செய்யப்படுவதுடன் அடுத்து வரும் இரு பருவங்களுக்கு தேர்வினை எழுத அனுமதிக்க இயலாது எனத் தேர்வுத் துறை தெளிவு படுத்தியுள்ளது என்ற தகவலினை தேர்வர்களுக்கு தெரிவித்தல் வேண்டும்.

9. தேர்வர்கள் நேரத்தை மட்டும் காட்டக்கூடிய சாதாரண கைக்கடிகாரத்தை மட்டுமே அணிந்து வர அனுமதிக்கலாம்.

10. எக்காரணத்தைக் கொண்டும் வருகை புரியாத தேர்வர்களின் இருக்கையில் வருகைபுரிந்த தேர்வர்கள் அமர்ந்து தேர்வெழுத அனுமதிக்கக்கூடாது.

உயிரியல் பாடத்தில் உயிரி–தாவரவியல், உயிரி–விலங்கியல் என்ற இரண்டு விடைத்தாட்கள் ஒரு முகப்புச் சீட்டின் கீழ் தைக்கப்பட்டுள்ளது எனவும், மாணவர்கள் உயிரி–தாவரவியல், உயிரி–விலங்கியல் விடைகளை அந்தந்த விடைத்தாட்களில் மட்டுமே எழுத வேண்டும் என்றும் அறிவுறுத்துமாறு தெரிவித்தல் வேண்டும்.

- மேற்படி அறிவிப்புகளைத் தேர்வர்களுக்கு அறைக் கண்காணிப்பாளர்கள் அறிவித்து உரிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

12. +1 / +2 / SSLC - **9.40** மணிக்கு அறைக் கண்காணிப்பாளர் தேர்வறைக்கு சென்றவுடன் வினாத்தாள், விடைத்தாள் ஆகியவற்றை மேஜையின் மீது வைத்து விட்டு +1 / +2 / SSLC - **9.45** மணிக்கு முதல் மணி அடித்தவுடன் தேர்வறையின் நுழைவு வாயிலில் தேர்வர்களின் நுழைவுச் சீட்டினைத் சரிபார்த்து, காலணி, பெல்ட் ஆகியவற்றை வெளியில் வைத்துவிட்டு, அவரவருக்கு ஒதுக்கப்பட்ட இருக்கையில் அமரச் செய்ய வேண்டும். மேலும் தேர்வர்கள் அலைபேசி எதுவும் வைத்திருக்கவில்லை என்பதையும் சோதித்து உறுதி செய்ய வேண்டும். தேர்வர்களிடம் அலைபேசி இருப்பின் அன்னாரை தேர்வறைக்குள் அனுமதிக்கவே கூடாது.

13. +1 / +2 / SSLC - **9.55** மணிக்கு வினாத்தாள் உறைகளைப் பிரிப்பதற்கான இரண்டாவது மணி (இரு முறை) அடிக்கப்படும். வினாத்தாள் உறை(கள்) பிரிக்கப்படும் முன்னர் அறையிலுள்ள தேர்வர்களுக்கு உறை(கள்) பிரிக்கப்படாமலிருப்பதைக் காண்பித்து, அதற்கு அத்தாட்சியாக வினாத்தாள் உறை மீது இரு தேர்வர்களிடம் நேரம் மற்றும் பதிவெண் குறிப்பிட்டுக் கையொப்பம் பெற வேண்டும்.

14. +1 / +2 / SSLC - **10.00** மணிக்கு வினாத்தாட்கள் தேர்வர்களுக்கு வழங்கப்படுவதற்கான மூன்றாவது மணி (மூன்று முறை) அடிக்கப்படும். வினாத்தாட்கள் படித்துப் பார்ப்பதற்காக வழங்கப்படும் 10 நிமிட நேரத்தில் எந்தவித அறிவிப்பும் வழங்கக் கூடாது. அறையிலுள்ள மேஜைக்கு அருகில் அமைதியாக நிற்க வேண்டும். தேர்வருக்கு அருகில் செல்லக் கூடாது.

15. +1 / +2 / SSLC - **10.10** மணிக்கு விடைத்தாள் வழங்குவதற்கான நான்காவது மணி (நான்கு முறை) அடிக்கப்படும். விடைத்தாள் வழங்கும்போது தேர்வரின் தேர்வு எண் மற்றும் பெயரைக் கூறி வழங்க வேண்டும். விடைத்தாளின் முகப்புச் சீட்டிலுள்ள புகைப்படம், பெயர், தேர்வு நாள், தேர்வெழுதும் பாடம், பயிற்று மொழி மற்றும் விடைத்தாளில் உள்ள பக்கங்கள் சரியாக உள்ளனவா என்பதை தேர்வரைச் சரிபார்த்துக் கொள்ளுமாறும், சரிபார்த்தப் பின்னர், உரிய இடத்தில் கையொப்பமிடுமாறும் அறிவுறுத்த வேண்டும். வருகைத்தாளில் (Attendance Sheet) தேர்வர்களிடம் கையொப்பம் பெற வேண்டும். மேலும், ஒவ்வொரு கூடுதல் தாள் (Additional Sheet) வழங்கும் போதும், வருகைத்தாளில் (Attendance Sheet) தேர்வர்களிடமிருந்து கையொப்பம் பெறுதல் வேண்டும்.

16. தேர்வுக்கு வருகை புரிந்த தேர்வரின் முகப்புச் சீட்டில் "Present" என்பதற்கு கீழே (✓) டிக் செய்து தேர்வர் கையொப்பமிட்டுள்ளாரா என்பதை சரிபார்த்த பின்னர் அறைக் கண்காணிப்பாளர் உரிய இடத்தில் கையொப்பமிட வேண்டும்.

இயற்பியல், வேதியியல், கணிதம், தாவரவியல், விலங்கியல், உயிரியல், வரலாறு, பொருளியியல், வணிகவியல், கணக்குப் பதிவியல் ஆகிய பாடங்களுக்கு மட்டும் A அல்லது B வகை வினாத்தாட்கள் வழங்கப்படுகின்றன. மேற்படி தேர்வுகளின்போது, ஒவ்வொரு தேர்வருக்கும் A அல்லது B வகை இவற்றுள் எவ்வகை வினாத்தாள் வழங்கப்பட்டது என்பதை சம்பந்தப்பட்டத் தேர்வரது விடைத்தாள் முகப்புத்தாளில் (Topsheet) [ ] அளிக்கப்பட்டுள்ள இடத்தில் அறைக் கண்காணிப்பாளரால் மட்டுமே பூர்த்தி செய்யப்பட்டுக் கையொப்பமிடப்பட வேண்டும். விடைத்தாளில் தேர்வரால் A / B என ( ✓ ) டிக் செய்யப்பட வேண்டும்.

7. +1 / +2 / SSLC - **10.15** மணிக்கு தேர்வு துவங்குவதை அறிவிப்பதற்கான ஐந்தாவது மணி (ஐந்து முறை) அடித்தவுடன் தேர்வினை எழுதலாம் என அறிவிப்பு செய்ய வேண்டும்.

18. +1 / +2 / SSLC - **10.15** மணிக்கு முதன்மைக் கண்காணிப்பாளர் / துறை அலுவலர் "தேர்வுக்கு வருகை புரியாதோர்" விடைத்தாள், மொழிப்பாடத் தேர்விற்கு விலக்கு பெற்ற தேர்வர்களின் (Language Exemption candidates) விடைத்தாள் மற்றும் வினாத்தாட்களைச் சேகரிக்கத் தேர்வறைக்கு வரும்போது, அவ்விடைத்தாளின் முகப்புத்தாளில் வருகைப்புரியாதோர் "Absent" என்பதற்கு கீழே சிகப்பு மையில் (X) செய்து உரிய இடத்தில் கையொப்பமிட்டு, வினாத்தாள் உறையுடன் ஒப்படைக்க வேண்டும். வருகைத்தாளில் (Attendance Sheet) அறைக் கண்காணிப்பாளர் வருகை புரியாத தேர்வர்களது பதிவெண்ணை சிவப்பு மையினால் சுழித்து வருகைப் புரியவில்லை

**(ABSENT)** என எழுதவேண்டும். மேலும் Language Exemption candidates என்பதையும் சிவப்பு மையினால் குறிப்பிட வேண்டும்.

19. +1 / +2 / SSLC - 10.15 மணிக்கு தொடங்கி ஒவ்வொரு அரைமணி நேரத்திற்கும் +1 / +2 / SSLC – 10.45, 11.15, 11.45, 12.15, 12.45 என மணி அடிக்க வேண்டும். 01.10–க்கு எச்சரிக்கை மணி (Warning Bell) அடிக்க வேண்டும். இறுதியாக 01.15 மணிக்குத் தேர்வு முடிந்ததற்கான நீண்ட மணி (Long Bell) அடிக்க வேண்டும்.

20 தேர்வர் எவரேனும் கூடுதல் விடைத்தாட்கள் கேட்டால் அதனை வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். கூடுதல் விடைத்தாள் வழங்கும் போது அதற்கான பதிவுகளை வருகைத்தாளில் (Attendence Sheet) தவறாமல் மேற்கொண்டு தேர்வர்களிடம் கையொப்பம் பெற வேண்டும்.

21 அறைக் கண்காணிப்பாளர் தேர்வு நேரம் முடியும் வரை எவ்வித புகாருக்கும் இடமளிக்காமல் தேர்வுப் பணியில் விழிப்புடன் செயல்பட்டு தேர்வரை ஒழுங்கீனச் செயல்களில் ஈடுபடவிடாமல் கவனமுடன் தன் பணியைச் செய்ய வேண்டும்.

22 தேர்வின்போது தேர்வர் எவரேனும் ஒழுங்கீனச் செயலில் ஈடுபட்டது கண்டுபிடிக்கப்பட்டால், அதன் விபரத்தை முதன்மைக் கண்காணிப்பாளரின் கவனத்திற்குக் கொண்டு சென்று அவரது அறிவுரைகளுக்கேற்ப செயல்படுவதுடன், அத்தேர்வரின் விடைத்தாள் புத்தகத்தில் முகப்புத்தாளில் முறைகேடு (Mal Practice) என்ற கட்டத்திற்குக் கீழே சிவப்பு மையில் ( ✓ ) டிக்செய்து தேர்வரின் ஒப்புதல் கடிதம், விடைத்தாள் மற்றும் ஆவணங்கள் ஆகியவற்றைத் தமது விளக்கக் கடிதத்துடன் முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

23 தேர்வு முடியும்வரை அறைக் கண்காணிப்பாளர்கள் விழிப்புடன் செயல்பட வேண்டும். தேர்வு நடைபெறும் சமயத்தில் அறைக் கண்காணிப்பாளர்கள் தேர்வறையை விட்டு வெளியே வருதல் கூடாது.

24 தேர்வு முடிந்ததற்கான இறுதி மணி அடித்தவுடன் அனைத்துத் தேர்வர்களையும் உடனடியாக எழுதுவதை நிறுத்தச் சொல்லி தேர்வர்களிடமிருந்து விடைத்தாள் புத்தகங்ளை பெற்றுக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு தேர்வரது விடைத்தாள் புத்தகத்துடன் இணைக்கப்பட்டுள்ள கூடுதல் விடைத்தாட்களின் எண்ணிக்கையும் வருகைப் பட்டியலில் அவர் கையொப்பமிட்டுள்ள கூடுதல் விடைத்தாட்களின் எண்ணிக்கையும் சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்து உறுதி செய்த பின்னரே தேர்வறையிலிருந்து தேர்வர்களை வெளியே செல்ல அனுமதிக்க வேண்டும். தேர்வறையில் கூடுதல் விடைத்தாள் பெற்றுத் தேர்வெழுதிய தேர்வர்களின் விடைத்தாள் புத்தகங்கள் நன்றாக கட்டப்பட்டு உறையிலிடப்பட வேண்டும். **இதுகுறித்த முழுப்பொறுப்பும் அறைக் கண்காணிப்பாளரையே சாரும். விடைத்தாட்களைத் தேர்வுக் கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைக்கும் வரை வேறு யாரிடமும் எக்காரணம் கொண்டும் ஒப்படைத்தல் கூடாது.**

**கூடுதல் நேரச் சலுகை:–**

கூடுதல் நேரச் சலுகை பெற்றுத் தேர்வெழுதும் தேர்வர்களுக்கான தேர்வறைக் கண்காணிப்பாளர்கள் தேர்வு முடியும் வரை தேர்வறையில் இருக்க வேண்டும். நிலையான படை உறுப்பினர்கள் அவ்வறைக்குச் சென்று கூடுதலாகக் கண்காணிப்புப் பணியை மேற்கொள்ள வேண்டும். டிஸ்லெக்சியா தேர்வர் என்பதை முதன்மை விடைத்தாளின் முதல் பக்கத்தில் சிவப்பு மையினால் எழுத வேண்டும்.

**கூடுதல் நேரச் சலுகை கோரும் தேர்வர்களின் விடைத்தாட்களை சிப்பமாக்குதல்:**

மேல்நிலை முதலாமாண்டு மற்றும் இரண்டாமாண்டு பொதுத்தேர்வுகளின் போது, கூடுதல் நேரச் சலுகை பெற்றுத் தேர்வெழுதும் தேர்வர்கள் உள்ள அறையின் கண்காணிப்பாளர்கள், தேர்வு நேரம் முடிவடைந்தவுடன், கூடுதல் நேரச் சலுகை கோராத பிற தேர்வர்களின் விடைத்தாட்களை அவ்வறைக்கான உறையிலிட்டு (SCRIPTWISE COVER), கூடுதல் நேரச் சலுகைக் கோரி தேர்வெழுதும் தேர்வர்களின்

பதிவெண்ணிற்கெதிரே கூடுதல் நேரம் ஒதுக்கப்பட்டு தனி உறையில் இடப்பட்டுள்ளது எனப் பதிவு செய்து, உறையின் மேல் **1/2** எனக் குறிப்பிடவேண்டும்.

சலுகைக் கோரி தேர்வெழுதிய தேர்வர்களின் விடைத்தாட்களை தனி உறையிலிட்டு அவ்வுறையின் மேல் தேர்வு மைய எண், தேர்வு நாள், அறை எண், பதிவெண், பாடம் மற்றும் பயிற்றுமொழி ஆகியவற்றை குறிப்பிடுவதுடன் உறையின் மீது **2/2** எனவும் குறிப்பிடவேண்டும்.

**(எ.கா. ஒரு அறையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட 20 தேர்வர்களில் 18 தேர்வர்கள் கூடுதல் நேர சலுகை கோராமல் தேர்வெழுதியிருப்பின் அவ்விடைத்தாட்களை தனி உறையிலிட்டு உறையின் மேல் 1/2 எனக் குறிப்பிடவேண்டும். கூடுதல் சலுகைக் கோரி தேர்வெழுதியிருப்பின் அவ்விடைத்தாட்களை தனி உறையிலிட்டு உறையின் மேல் 2/2 எனக் குறிப்பிடவேண்டும்).**

பின்னர், மேற்குறிப்பிட்ட தேர்வரின் விடைத்தாட்களை மற்ற தேர்வர்களது விடைத்தாட்களுடன் சேர்த்து ஒரே சிப்பமாக்கி முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

25 அனைத்து விடைத்தாள் புத்தகங்களையும் சேகரித்த பின் தேர்வுக் கட்டுப்பாட்டு அறைக்குச் சென்று ஒவ்வொரு விடைத்தாள் புத்தகத்தின் அனைத்துப் பக்கங்களையும் முழுமையாகச் சரிபார்த்து அதன் பின்னர் விடைத்தாளின் மேல் பகுதியில் ஒவ்வொரு இரண்டு பக்கங்களும் இணையுமிடத்திலும், தேர்வர் எழுதிய கடைசி வரிக்குக் கீழும் தேர்வுத் துறையின் +1 / +2 – விற்கு (DGE/HSE) என்ற முத்திரையினையும், SSLC-க்கு (DGE/SSLC) என்ற முத்திரையினையும் இடவேண்டும்.

விடைத்தாள் புத்தகத்தின் அனைத்துப் பக்கங்களையும் அறைக் கண்காணிப்பாளர்கள் மீண்டும் ஒருமுறை முழுமையாக சரிபார்த்துத் தேர்வர்கள் எவரேனும் விடைத்தாளில் அனைத்து விடைகளையும் கோடிட்டு அடித்திருக்கும் பட்சத்தில் அது குறித்து எழுத்துப்பூர்வமான சான்றினை முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

26 **விடைத்தாள் புத்தகத்தின் முகப்புத்தாளின் ‘A’ பகுதியினை இரும்பு அளவுகோல் (Metal Scale) உதவியுடன் கவனமாக பிரிக்க வேண்டும். B பகுதி நீக்கப்படக்கூடாது. அவ்வாறு பிரிக்கும் போது தவறுதலாக வேகமாக B அல்லது C பகுதிகளை சேதப்படுத்தி விடக்கூடாது. கடந்த ஆண்டுகளில் சில நிகழ்வுகளில் A’ பகுதியை நீக்கும் போது தவறுதலாக B பகுதியையும் நீக்கிவிட்டு, அதன் பின்னர் மீண்டும் B பகுதியை விடைத்தாட்களில் இணைக்கும் போது ஒரு தேர்வரது B பகுதி வேறு தேர்வரது விடைத்தாளில் மாற்றி இணைக்கப்பட்டு பெரும் சிரமத்தை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்கது. எனவே ‘A’ பகுதியை மட்டுமே நீக்க வேண்டும். B மற்றும் C பகுதிகள் எவ்வித சேதமுமின்றி விடைத்தாளிலேயே இருத்தல் வேண்டும்.**

**‘A’ பகுதி பிரிக்கப்பட்டவுடன் பதிவெண் வரிசைப்படி அடுக்கி, கம்பிணைப்பு கருவி மூலம் இணைத்து (staple செய்து) வருகைப்பட்டியலின்படி வருகைப்புரிந்த தேர்வர்களது எண்ணிக்கையும், கைவசமுள்ள ‘A’ பகுதி எண்ணிக்கையும் சமமாக இருப்பதை உறுதி செய்து துறை அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.**

27 கூடுதல் விடைத்தாள் பெற்ற தேர்வர்களின் விடைத்தாள் புத்தகங்களை நூல் கொண்டு கட்டப் பட்டு இருந்தாலும் விடைத்தாள் புத்தகத்தினை கம்பிணைப்பு கருவியினை (Stapler) பயன்படுத்தி முதன்மை விடைத்தாள் புத்தகத்துடன் ஒன்றிணைக்க வேண்டும்

**28.** மேலும் “A” பகுதியை நீக்கி அவற்றை துறை அலுவலரிடம் ஒப்படைத்த பின்னர், ஒவ்வொரு விடைத்தாள் உறையினுள் உள்ள விடைத்தாட்களை அவை வரிசைக்கிரமமாக இல்லாத வகையில் கலக்கிப் பிரித்து (Shuffling), அதன் பின்னர் உறையினுள் இட்டு அதன் பின்னரே உறையை ஒட்டி அறைக் கண்காணிப்பாளர் கையொப்பமிட வேண்டும்.

இயற்பியல், வேதியியல், உயிரியல், தாவரவியல், விலங்கியல், கணிதவியல், வரலாறு, பொருளியல், வணிகவியல், கணக்குப் பதிவியல் ஆகிய பத்து பாடங்களுக்கு “A” மற்றும் “B” இரு வகைகளில் வினாத்தாட்கள் வழங்கப்படுவதால், அப்பாடங்களுக்கு மட்டும், விடைத்தாள் உறையில், “A” வகை விடைத்தாட்கள் தனியாக கலக்கிப் பிரித்து (shuffling) மேலே வைக்கப்பட வேண்டும். அதன் கீழாக “B” வகை விடைத்தாட்கள் தனியாக கலக்கிப் பிரித்து (shuffling) வைக்கப்பட வேண்டும்.

29. உறையின் மேல் பகுதியில் தேர்வுக்கு வருகைப் புரிந்தோர், வருகைப் புரியாதோர், மொழிப் பாட விலக்கு பெற்றோர் மற்றும் ஒழுங்கீனச் செயலில் ஈடுபட்டோர் விவரங்களைப் பூர்த்தி செய்து வருகைபுரிந்த தேர்வர்களின் விடைத்தாட்களை, மொழி / பாட / பயிற்று மொழிவாரியாக தனித்தனியே அதற்குரிய உறையிலிட்டு, மடித்து, ஒட்டி, இரண்டு இடங்களிலும் (உறையின் மேல் பகுதி மற்றும் கீழ்ப்பகுதி) குறுக்காகக் கையொப்பமிட்டு, நெகிழி ஒட்டு நாடா (**Cello Tape**) கொண்டு ஒட்டி, முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைக்க வேண்டும். **CSD** படிவத்தில் (படிவங்களில்) உரிய விபரங்களை பூர்த்தி செய்து கையொப்பமிட வேண்டும். விடைத்தாள் எதுவும் விடைத்தாள் உறை எடுத்துவரும் பையில் தவறுதலாக விடப்படவில்லை என்பதை சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். இப்பணிகள் அனைத்திற்கும் அறைக் கண்காணிப்பாளரே முழுப் பொறுப்பேற்க வேண்டும்.

30. விடைத்தாள் உறையின் மீது தேர்வு எண்ணுக்கு நேராக வருகை புரியாதவர்களுக்கு சிவப்பு மையினால் வருகைப்புரியாதோர் (ABSENT) என்று அறைக் கண்காணிப்பாளரால் கட்டாயம் எழுதப்பட வேண்டும்.

31. அனுமதிக்கப்பட்டப் பயிற்று மொழியில் மாற்றம் செய்யப்பட்டிருப்பின் விடைத்தாள் உறையின் மீது, விடை எழுதப்பட்ட மொழியினை குறிப்பிட வேண்டும்.

## VI. அறைக் கண்காணிப்பாளர் (Hall Supervisor) பணிகள் சரிபார்ப்புப் பட்டியல்:

1. நியமன ஆணை பெற்றதும் முதன்மைக் கண்காணிப்பாளரின் அறிவுரைக் கூட்டத்தில் கலந்து கொண்டு தொலைபேசி / அலைபேசி எண்களை வழங்குதல்.
2. தேர்வு நாள் நடைமுறை

| நேரம் | நடைமுறை |
|---|---|
| +1 /+2 / SSLC 8.45 | தேர்வு மையத்திற்கு வருகை புரிய வேண்டும்.<br>அடையாள அட்டை அணிய வேண்டும்.<br>கட்டுப்பாட்டு அறையில் வருகைப் பதிவேடு கையொப்பமிடுதல்.<br>அலைபேசியினை கட்டுப்பாட்டு அறையில் ஒப்படைத்தல்.<br>அறைக் கண்காணிப்பாளர்கள் குலுக்கல் முறையில் அறை எண் ஒதுக்கீடு செய்யப்பட்ட அன்றைய தேர்வுக்கான விடைத்தாள் உறையினைப் பெற்றுக் கொள்ளுதல். (அறைக்குரிய மாணவர்களின் வருகைப்பட்டியல் உட்பட எடுத்துக் கொள்ளுதல்) |
| | உறையின் மீதுள்ள பதிவெண்ணும் விடைத்தாள் முகப்புச் சீட்டில் உள்ள பதிவு எண்ணும் சரியாக உள்ளதா என்பதை சரிபார்த்தல். |
| | முகப்புச் சீட்டில் முதன்மைக் கண்காணிப்பாளரின் நேர்பபடி (Fascimile) உள்ளதா என்பதையும், விடைத்தாளின் அனைத்துப் பக்கங்களும் சரியாக உள்ளனவா என்பதையும் சரிபார்த்தப் பின்னர் முகப்புத் தாளின் ‘A’ பகுதியின் வலது புறத்தில் **Verified** எனக் குறிப்பிட்டுக் சுருக்கொப்பம் இடுதல். கூடுதல் விடைத்தாட்களை பெற்றுக் கொள்ளுதல். |
| 09.30-09.40 / | வினாத்தாள் அடங்கிய சிப்பங்களை முதன்மைக் கண்காணிப்பாளர் மற்றும் துறை அலுவலர் இணைந்து பிரித்த பின் வினாத்தாள் உறைகளை (மடக்கு கத்தி உட்பட) பெற்றுக்கொள்ளுதல் – அறைக்குச் செல்லுதல். |
| 9.45 | முதல் மணி ஒரு முறை அடிக்கப்படும் – அறைக் கண்காணிப்பாளர் தேர்வறையின் வாயிலை அடைதல் – தேர்வர்கள் வருகை – அறை கண்காணிப்பாளர்கள் தேர்வர்களின் நுழைவுச் சீட்டினைச் சரிபார்த்து தேர்வு அறைக்குள் அனுமதித்தல். |
| 9.50 | தேர்வர்களுக்கான சிறப்பு அறிவிப்புகள் வழங்கும் நேரம் (Special Announcements) |
| 9.55 | இரண்டாவது மணி இரண்டுமுறை அடிக்கப்படும்.<br>வினாத்தாட்கள் உறைகள் பிரிக்கப்படாமலிருப்பதைக் காண்பித்து இரு தேர்வர்களிடம் அத்தாட்சி சான்றிதழ் பெறுதல்.<br>வினாத்தாள் கட்டினைப் பிரித்தல். |
| 10.00 | மூன்றாவது மணி மூன்றுமுறை அடிக்கப்படும்.<br>தேர்வர்களுக்கு வினாத்தாள் வழங்குதல். |
| 10.10 | **1.** நான்காவது மணி நான்கு முறை அடிக்கப்படும்.<br>விடைத்தாட்கள் வழங்குதல்.<br>**2.** தேர்வரது முகப்புச்சீட்டில் உள்ள பதிவெண், புகைப்படம் ஆகியவற்றை ஒப்பிட்டு சரிபார்த்து அத்தேர்வர்தானா என்று உறுதி செய்து கொண்டு |

| | |
|---|---|
| | P என்பதற்கு நேராக ( ✓ ) tick செய்து தமது கையொப்பத்தை இடுதல் – முக்கியப் பாடத் தேர்வுகளின் போது A வகையா அல்லது B வகையா என்பதைக் கட்டங்களில் நிரப்புதல் – வருகைப் பட்டியலில் (Attendance Sheet) தேர்வரது கையொப்பம் பெறுதல் மற்றும் முகப்புத்தாளில் (Top Sheet) தேர்வரது கையொப்பம் பெறுதல். |
| 10.15 | ஐந்தாவது மணி ஐந்துமுறை அடிக்கப்படும்.<br>1. தேர்வினை எழுதலாம் என அறிவித்தல்.<br>2. வருகை புரியாதோர் முகப்புச் சீட்டில் ‘A’ என சிவப்பு மையினால் (✓) tick செய்து ஒப்படைத்தல்.<br>3. முதன்மைக் கண்காணிப்பாளர் / துறை அலுவலரிடம் வருகைப் புரியாதோரின் வினாத்தாள் / விடைத்தாளினை ஒப்படைத்தல். |
| 10.45<br>11.15<br>11.45<br>12.15<br>12.45 | ஒவ்வொரு அரை மணி நேரத்திற்கும் ஒரு மணி அடிக்கப்படும். |
| 01.10 | 1. எச்சரிக்கை மணி (Warning Bell) அடிக்கப்படும்.<br>2.தேர்வர்கள் கூடுதல் விடைத்தாள் பெற்றிருப்பின், அதனை முதன்மை விடைத் தாளுடன் வெள்ளை நூல் கொண்டு கட்டுமாறு அறிவுறுத்தல் வேண்டும். |
| 01.15 | Long Bell.<br>1. தேர்வு நேரம் முடிதல் – அனைத்து விடைத்தாட்களையும் சேகரித்தல் வேண்டும்.<br>2. தேர்வுக் கட்டுப்பாட்டு அறைக்கு தாமதமின்றி செல்லுதல்.<br>3. ஒவ்வொரு விடைத்தாளில் அனைத்துப் பக்கங்களையும் முழுமையாகச் சரிபார்த்து, அதன் பின்னர் விடைத்தாளின் மேல் பகுதியில் ஒவ்வொரு இரண்டு பக்கங்களும் இணையுமிடத்திலும், தேர்வர் எழுதிய கடைசி வரிக்குக் கீழும், தேர்வுத் துறையின் +1 / +2–விற்கு (DGE/HSE) என்ற முத்திரையினையும், SSLC–க்கு (DGE/SSLC) என்ற முத்திரையினையும் இடவேண்டும்.<br>4. **சொல்வதை எழுதுபவர் இல்லாமல் தேர்வெழுதும், டிஸ்லெக்சியா (Dyslexia) தேர்வருக்கு மட்டும் டிஸ்லெக்சியா (Dyslexia) தேர்வர் என்பதை விடைத்தாளின் மீது சிவப்பு மையினால் எழுத வேண்டும்.**<br>5. விடைத்தாள் முகப்புத்தாளின் ‘A’ பகுதியினை இரும்பு அளவுகோல் (Metal Scale) உதவியுடன் பிரித்து கவனமாக பார்கோடு பாதிக்காதபடி கம்பி பிணைப்பு கருவி மூலம் இணைத்து (Staple செய்தல்) துறை அலுவலரிடம் ஒப்படைத்தல்.<br>6. கூடுதல் விடைத்தாள் பயன்படுத்திய தேர்வரது விடைத்தாளை முதன்மை விடைத்தாளுடன் நூலிட்டு கட்டப்பட்டிருப்பினும், முதன்மை விடைத்தாளுடன் கம்பி பிணைப்பு கருவி மூலம் இணைத்தல் (Staple செய்தல்) அவசியமாகும்.<br>7. விடைத்தாள் உறையிலுள்ள விடைத்தாட்களை, அவை பதிவெண் வரிசைப்படி இல்லாத வண்ணம் கலக்கி பிரித்து ( shuffle செய்து) உறையில் இடுதல் – A வகை / B வகை என தனித்தனியாக shuffle செய்து உறையில் இடுதல். |

| | |
|---|---|
| | 8. விடைத்தாள் கலக்கிப் பிரித்த உறையின்மீது P/A விவரங்களைப் பூர்த்தி செய்து இரண்டு இடங்களிலும் உறையின் மேல்பகுதி மற்றும் கீழ்ப்பகுதி குறுக்கே தமது கையொப்பமிட்டு நெகிழி ஒட்டு நாடா (Cello tape) கொண்டு இரு இடங்களிலும் ஒட்டி, முதன்மைக் கண்காணிப்பாளரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.<br>9. உறையிலிடப்பட்ட விடைத்தாள் விவரப் (CSD) படிவத்தில் கையொப்பமிடுதல்.<br>10. தமது அறைக்குரிய அனைத்து வருகை புரிந்தோர் விடைத்தாட்களும், அவர்கள் பயன்படுத்திய கூடுதல் விடைத்தாட்களும் விடுபடாமல் விடைத்தாள் உறையில் வைத்து ஒப்படைக்கப்பட்டுவிட்டனவா என உறுதி செய்தல் வேண்டும். |